Elevate Textiles™

# உலகளாவிய நடத்தை விதி

# உள்ளடக்க அட்டவணை


அறிமுகம் 3
விதிமீறலுக்கான அபராதங்கள்
உலகளாவிய நடத்தை விதியை யார் பின்பற்றியாக வேண்டும்
நாணயம் குறித்த கவலைகளைத் தீர்த்து வைத்தல்
விசாரணை மற்றும் ஒழுக்கச் செயல்முறை 4
பயிற்சி மற்றும் கல்வி
பணியின் தேவைகள்

*Elevate Textiles* வணிகத்தில் நேர்மை 5
நலன் முரண்பாடுகள்
தனிப்பட்ட வியாபார உறவுகள்
உறவினர்களோடு வியாபாரம் செய்தல்
பணிக்கொடைகள், பரிசுப் பொருட்கள், மற்றும் பொழுதுபோக்கு
போட்டித் தகவல்களைச் சேர்த்தல்

சர்வதேச வர்த்தகச் சட்டங்கள்
அயல்நாட்டு ஊழல் பழக்கங்கள் சட்டம் 6
நம்பிக்கையின்மை மற்றும் நியாயமான போட்டி
வர்த்தகத் தடைகள் 7
புறக்கணிப்பு-எதிர்ப்பு
பாதுகாப்பு
அரசியல் செயல்பாடு மற்றும் பங்களிப்புகள்
சட்டத்திற்கு இணங்கி நடத்தல்
தரம் மற்றும் பரிசோதனை 8

*Elevate Textiles* நிறுவனப் பணியிடத்தில் நேர்மை 8
மக்களை நியாயமாக நடத்துதல்
சம வாய்ப்புப் பணியமர்த்தும் நிறுவனம்
பாகுபாடு காண்பிக்காமை / துன்புறுத்தல் கொடுக்காமை
போதை மருந்து இல்லாத பணியிடம் 9
மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பழக்கங்கள்
குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர்
வேலை நேரங்கள்
சம்பளங்கள் 10
பணியிட அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறை
கூட்டு பேரம்
மோசடியான நடத்தை
சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள்
சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு
சுற்றுச்சூழல் கொள்கைகள்
உலகளாவிய பேண்தகைமைக்கு *Elevate Textiles* நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு 11
*Elevate Textiles* தடைசெய்யப்பட்ட பொருட்கள் பட்டியல் கொள்கை

*Elevate Textiles* தகவல் மற்றும் சொத்தின் நேர்மை
இரகசியத் தகவல்
நிதி அறிக்கை மற்றும் பதிவு பராமரித்தலின் துல்லியத்தன்மை 12
நிறுவன வளங்கள் மற்றும் அறிவுசார் சொத்து
அரசாங்கத்துடனான தகவல்தொடர்புகள் 13
பொதுமக்களுடனான தகவல்தொடர்புகள்

நீண்டநாள் நிலைக்கும் அர்ப்பணிப்பு 13

கூட்டாளி உறுதிப்படுத்தல் 14

# அறிமுகம்

### உலகளாவிய நடத்தை விதியின் நிர்வாகம்

பொருத்தமான வணிக நன்னெறிகளும், நடத்தையும்தான் வித்தியாசத்தை உண்டுபண்ணுகின்றன.

ஒவ்வொரு நாளும், *Elevate Textiles* நிறுவனத்தின் வெற்றிக்கு மிக முக்கியமான முடிவுகளை எதிர்கொள்ளவும், எடுக்கவும் செய்வீர்கள். நன்னெறியற்ற, முறையற்ற அல்லது தொழில்முறைக்கு ஒவ்வாத செயல் ஒன்றை நியாயப்படுத்தும் ஓர் வியாபாரத் தேவையொன்று ஒருபோதும் இருக்கப் போவதில்லை. நாம் எவ்வாறு வியாபாரம் செய்கிறோம் மற்றும் மற்றவர்களை நாம் எவ்விதம் நடத்துகிறோம் என்பதைப் பொறுத்து, நமது உலகளாவிய வியாபாரம் மற்றும் புகழ் பாதுகாக்கப்படும்.

உலகெங்கிலும் உள்ள அனைத்து *Elevate Textiles* நிறுவனக் கூட்டாளிகளும் நடத்தையின் மிக உயரிய தரநிலைகளைப் புரிந்துகொண்டு அதற்கு இணங்கி நடக்கிறார்கள் என்பதையும், அனைத்துச் சந்தைகளிலும் நாம் நமது வாடிக்கையாளர்களுக்கு ஒரே விதமான தரம், சேவை மற்றும் மதிப்பைக் கொடுக்கிறோம் என்பதையும் உறுதி செய்வதே இந்த உலகளாவிய நடத்தை விதியின் முதன்மையான நோக்கமாக உள்ளது. இந்த உலகளாவிய நடத்தை விதி, உங்கள் வேலையில் நல்ல முடிவுகளை எடுக்க மற்றும் வழிகாட்டியாக விளங்கும். இந்த உலகளாவிய நடத்தை விதி, நீங்கள் சந்திக்கக் கூடிய ஒவ்வொரு சூழலையும் தீர்த்து வைக்கவோ அல்லது உங்கள் பதவிக்கான தேவையாக இருக்கவோ முயற்சிப்பதில்லை. ஆனால் அதற்குப் பதிலாக, உங்களது தொழில்முறையிலான மற்றும் தனிப்பட்ட நடத்தைகள் குறித்தும், அதேபோல, கூட்டாளிகள் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டும் என *Elevate Textiles* நிறுவனம் எதிர்பார்க்கிற அடிப்படையான விதிகள் மற்றும் நடைமுறைகள் குறித்தும் *Elevate Textiles* நிறுவனத்திற்கு உள்ள அடிப்படை எதிர்பார்ப்புகளை அமைத்துத் தருகின்றது. உங்களது செயல்பாடுகள் *Elevate Textiles* நிறுவனம் தனது நேர்மைக்காகப் பெற்றுள்ள புகழை ஒருபோதும் சேதமடையச் செய்துவிடாதபடி, இவ்வுலகளாவிய நடத்தை விதி, உங்களது நல்ல தீர்மானத்தையும், போது அறிவையும் உபயோகிப்பதற்கான உங்களது தனிப்பட்ட பொறுப்பிற்குப் பதிலானதாக அமைவதில்லை மேலும் அவ்விதம் அமையவும் கூடாது. நீங்கள் இந்த உலகளாவிய நடத்தை விதியை உலகளாவியக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், மற்றும் உங்கள் துறை, துணை நிறுவனம், அல்லது வணிகப் பிரிவின் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் வேலை விதிகள் ஆகியவற்றோடு ஒருங்கிணைத்து உபயோகிக்கக் கூடாது. கடைசியில், உங்களது தனிப்பட்ட நாணயமும், நமது நிறுவனத்தின் நாணயமும், சரியான நடவடிக்கைப் போக்கைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள உங்களது தனிப்பட்ட நிதானிப்பையே சார்ந்துள்ளது.

இந்த உலகளாவிய நடத்தை விதியில் விவாதித்துள்ள ஒவ்வொரு பிரச்சினையும், ஒவ்வொரு பணியாளருக்கும் பொருந்தக்கூடியதாக இருக்காது என்கிற போதிலும், உலகெங்கிலும் உள்ள அனைத்து ஊழியர்களும் இக்கொள்கைகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு இணங்கி நடக்கும் வகையில், இந்த உலகளாவிய நடத்தை விதியை நன்கு பரிச்சயம் செய்துகொள்ள வேண்டும் என்றே *Elevate Textiles* நிறுவனம் எதிர்பார்க்கின்றது. நாங்கள் கட்டுப்படுத்துகிற துணை நிறுவனங்கள் அனைத்தும் இந்த உலகளாவிய நடத்தை விதியைப் பின்பற்றுவதை *Elevate Textiles* நிறுவனம் உறுதி செய்கிறது. கூடுதலாக, எங்களது வியாபாரக் கூட்டுப் பங்காளர்கள் மற்றும் எங்களது உரிமம் பெற்றவர்களும், இந்த நடத்தை விதியின் உத்வேகத்திலேயே தங்களது வியாபாரத்தையும் நடத்திக் கொள்ள நாங்கள் அவர்களோடு சேர்ந்து உழைக்கிறோம்.

### உலகளாவிய நடத்தை விதியை யார் பின்பற்றியாக வேண்டும்

கூட்டாளிகள் அனைவரும் இந்த உலகளாவிய நடத்தை விதியில் உள்ள கோட்பாடுகள் மற்றும் தேவைகளுக்கு இணங்கி நடந்தாக வேண்டும். மேலும் அவர்கள் *Elevate Textiles* நிறுவனத்தின் சார்பில் செயல்படும்போது, வழிகாட்டுதலுக்காக இவ்விதிப் பார்த்து அறிந்துகொள்ள வேண்டும். கூட்டாளிகள், இந்த உலகளாவிய நடத்தை விதிக்கு முரண்படுகிற எந்தச் செயலையும் செய்து முடிக்குமாறு, தெரிந்தே ஒரு ஒப்பந்ததாரரையோ, முகவரையோ, ஆலோசகரையோ, சப்ளையரையோ அல்லது மற்ற மூன்றாம் தரப்பினரையோ உபயோகிக்கக் கூடாது. *Elevate Textiles* நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்ததாரர்கள், முகவர்கள் அல்லது ஆலோசகர்கள் போன்ற மூன்ற தரப்பினர்களை ஈடுபடுத்துகிற கூட்டாளிகள், அத்தரப்பினருக்கு இவ்வுலகளாவிய நடத்தை விதி குறித்துத் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு கேட்கவேண்டும் மேலும் கூடுமான இடங்களில் இவ்விதிக்கு இணங்கி நடப்பதில் ஒத்துழைப்பை நாட வேண்டும்.

### நாணயம் குறித்த கவலைகளைத் தீர்த்து வைத்தல்

ஒரு சிக்கலைக் கவனிக்கும்போது அல்லது கேள்வி ஏற்படும்போது அது குறித்துப் பேசுவதற்கு நாம் அனைவரும் பொறுப்பு கொண்டுள்ளோம். அப்போதுதான் *Elevate Textiles* நிறுவனத்தால் அந்தச் சிக்கலைத் தீர்க்க முடியும். ஏதேனும் சூழல் குறித்து உங்களுக்குக் கேள்விகள் இருந்தாலோ அல்லது உலகளாவிய நடத்தை விதி, நமது கொள்கைகள் அல்லது சட்டத்தின் சாத்தியமான மீறல் அல்லது முறையற்ற நடத்தையை நீங்கள் கவனித்தாலோ, புகாரளித்திடுங்கள். பின்வரும் நபர்களில் ஒருவரிடமிருந்து நீங்கள் உதவியை நாடலாம்:

- உங்கள் மேலாளர்
- உங்கள் மனிதவள மேலாளர்
- நீங்கள் அறிவிப்பு செய்யும் வரிசைமுறையில் உள்ள மற்ற மேலாளர்(கள்)
- *Elevate Textiles* நிறுவனத்தின் பெருநிறுவனச் சட்டத்துறை
    - compliance@elevatetextiles.com
- *Elevate Textiles* நிறுவனத்தின் பொது ஆலோசகர் மற்றும் தலைமை இணக்க அலுவலர்
    - Kristen.hughes@elevatetextiles.com +1-704-951-2655

மேலே பட்டியலிடப்பட்டுள்ள நபர்களில் ஒருவரிடம் மீறலைப் புகாரளிப்பதை நீங்கள் வசதியாக உணராவிட்டால், *Elevate Textiles* நிறுவனத்தின் *Integrity Line*-ஐ நீங்கள் பயன்படுத்தலாம் இது மின்னஞ்சல் அல்லது தொலைபேசி வழியாக, எந்தவொரு நபரும் ரகசியமாகவும் அநாமதேயமாகவும் புகாரளிக்க அனுமதிக்கிறது. *Integrity line*-இல் நீங்கள் ஒரு புகாரை உருவாக்கும் போது, *Elevate Textiles* நிறுவனத்திற்கு (உங்களை அடையாளம் காண நீங்கள் தேர்வுசெய்தாலன்றி) அடையாளம் காணும் தகவல்களை வழங்க வேண்டாம், வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை. *Integrity Line* வழியாக ஒரு புகாரைச் சமர்ப்பிக்க, நாடுகள் குறிப்பான *Integrity Line* எண்களைக் காண்பதற்கு அல்லது மின்னணு சமர்ப்பிப்பை செய்வதற்கு, *eleatetextiles.alertline.com* ஐப் பார்வையிடவும்.

நன்னம்பிக்கையின் பேரில் கவலைகளை எழுப்புகிறவர்களுக்கு எதிராக அல்லது ஒரு இணக்க விசாரணையில் நன்னம்பிக்கையின் பேரில் உதவிபுரிகிற நபர் எவருக்கும் எதிராக *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள் வஞ்சம் தீர்க்க நாடுவது அல்லது பழிவாங்க நாடுவது இந்த உலகளாவிய நடத்தை விதியை மீறுவதாகும். கூடுதலாக, பழிவாங்குதல் என்பது இந்த உலகளாவிய நடத்தை விதி குறித்ததோர் தனிப்பட்ட கடுமையான விதிமீறலாகும். மேலும் இதனை மற்ற உலகளாவிய நடத்தை விதிமீறல்களை அறிவிப்பதைப் போன்ற அதே விதத்திலேயே அறிவிக்க வேண்டும். "நல் விசுவாசம்" என்பதற்கு நீங்கள் சரியானவராக இருக்க வேண்டும் என்று அர்த்தமல்ல, ஆனால் நீங்கள் அதனைப் புரிந்து கொள்ளும் விதமாக, நீங்கள் உண்மையைச் சொல்கிறீர்கள் என்பதே அவசியமாகின்றது.

## விசாரணை மற்றும் ஒழுக்கச் செயல்முறை

உலகளாவிய நடத்தை விதி, நமது கொள்கைகள் அல்லது சட்டம் ஆகியவற்றின் மீறல்களை நாங்கள் தீவிரமாக எடுத்துக்கொள்வோம். உலகளாவிய நடத்தை விதியில் உள்ள இக்கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து, இக்கொள்கைகளுக்கு இணங்கி நடப்பது என்பது, *Elevate Textiles* நிறுவனத்தில் நீங்கள் பெற்றுள்ள வேலைவாய்ப்பின் ஓர் நிபந்தனையாகும். இந்தக் கொள்கைகளை மீறும் எந்தவொரு இயக்குனரோ, அதிகாரியோ அல்லது பணியாளரோ பணிநீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

எந்தவொரு சாத்தியமான முறையற்ற நடத்தை அல்லது மீறல்களையும் *Elevate Textiles* முழுமையாக விசாரணை செய்யும். விவரங்களை வழங்குவது தனியுரிமை பரிசீலனைகளை மீறாது மற்றும் மேலதிக விசாரணை அல்லது சரிசெய்தல் நடவடிக்கையைப் பாதிக்காது என்ற பட்சத்தில், தனிப்பட்ட புகாரளித்திடும் நபருக்கு விசாரணையின் முடிவுகளும், ஒழுங்குமுறைச் செயல்முறையும் வழங்கப்படலாம்.

## பயிற்சி மற்றும் கல்வி

உலகளாவிய நடத்தை விதி, அனைத்து இணக்கக் கொள்கைகள் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ("*Elevate Textiles* கொள்கைகள்") குறித்த வழக்கமான உலகளாவிய பயிற்சி மற்றும் கல்வித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்படும். *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள் அனைவரும் *Elevate Textiles* நிறுவனக் கொள்கைகளின் தேவைகள், அவற்றிற்கு இணங்கி நடப்பதன் முக்கியத்துவம், அவை குறித்த அவர்களது பொறுப்புகள் ஆகியவற்றை நன்கு பரிச்சயம் செய்து கொள்ளவதை உறுதிசெய்வதே இந்தப் பயிற்சித் திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. *Elevate Textiles* நிறுவன அமைவிடங்கள் ஒவ்வொன்றிலும் இவ்விணக்கத் தகவல்தொடர்பும் பயிற்சித் திட்டமும் அமல்படுத்தப்படும்.

இந்த உலகளாவிய நடத்தை விதிகளின் கூறுகள், குறிக்கோள்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் குறித்து அனைத்து தொழிலாளர்களையும் *Elevate Textiles*தொடர்புகொண்டு பயிற்சி அளிக்கும்.

*Elevate Textiles* நிறுவனத்தின் அனைத்து இடங்களிலும் உள்ள முக்கிய மேற்பார்வையாளர்கள், மேலாண்மை மற்றும் விற்பனை கூட்டாளர்களுக்கு இந்த உலகளாவிய நடத்தை விதிகளைப் படிப்பதற்கும், *Elevate Textiles* நிறுவனக் கொள்கைகள் குறித்து விவாதிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கும். கூடுதலாக, உலகளாவிய நடத்தை விதிகளின் நோக்கம் மற்றும் அணுகலை *Elevate Textiles* கண்காணிக்கும், இதில் தொழிலாளர்கள் தங்கள் பயிற்சி வருகை மற்றும் இணக்கத்தைச் சான்றளிக்கும் உலகளாவிய நடத்தை விதிப் பிரகடனத்தை பூர்த்தி செய்வதற்கான ஒரு திட்டமும் உள்ளடங்குகிறது.

## பணியின் தேவைகள்

அனைத்து ஊழியர்களும், பார்வையாளர்களும் படித்துப் பார்க்கக்கூடியதும், நன்கு கண்ணில் படக்கூடியதுமானதோர் இடத்திலேயே இந்த உலகளாவிய நடத்தை விதியை *Elevate Textiles* நிறுவன அலுவலகங்கள் ஒட்டி வைக்கும். கூடுதலாக, *Elevate Textiles* இணையத்தில் பல்வேறு மொழிகளில் இந்த உலகளாவிய நடத்தை கிடைக்கப்பெறுகிறது. கோரிக்கையின் பேரில் இந்த உலகளாவிய நடத்தை விதியின் அச்சிட்ட நகல்கள் கிடைக்கப்பெறும்.

# *Elevate Textiles* வணிகத்தில் நேர்மை

*ஒவ்வொரு நாளும் நாம் எவ்விதமாக வியாபாரத்தை நடத்துகிறோம் என்பதைக் கட்டுப்படுத்துகிற விதிகள்*

## நலன் முரண்பாடுகள்

உங்களது தனிப்பட்ட நலன், Elevate Textiles நிறுவனத்தின் நலன்களோடு குறுக்கிடும்போது அல்லது குறுக்கிடுவதாகத் தோன்றும்போது நல முரண்பாடு ஏற்படலாம். எப்போதுமே வணிக முடிவுகளை, உங்கள் சொந்த நலன்களின் அடிப்படையில் அமைப்பதை விட, Elevate Textiles நிறுவனத் தேவைகளின் அடிப்படையிலேயே அமைக்க வேண்டும். உதாரணமாக, (i) நீங்கள் நடவடிக்கைகளை எடுக்கும் போது அல்லது உங்கள் பணியைப் பாரபட்சமில்லாமல் அல்லது திறமையாக செயல்படுத்துவதைக் கடினமாக்கக்கூடிய நலன்கள் உங்களுக்கு இருக்கும் போது; (ii) Elevate Textiles நிறுவனத்தில் நீங்கள் வகிக்கும் பதவி காரணமாக நீங்களோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர் ஒருவரோ முறையற்ற பலன்களைப் பெறும் போது; அல்லது (iii) Elevate Textiles நிறுவனம் உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ கடன் வசதி செய்து தரும்போது அல்லது அதுபோன்ற வசதிகளுக்கு உத்திரவாதமளிக்கும்போது நல முரண்பாடுகள் எழலாம்.

Elevate Textiles நிறுவனக் கொள்கையின் ஒரு விஷயமாக, நல முரண்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். நல முரண்பாடு என்பது எப்போதுமே தெளிவானதொன்றாக இருந்து விடாமல் போய்விடலாம். ஆகவே உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், நிர்வாகத்தில் மேல்நிலையில் உள்ளவர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் நல முரண்பாடு ஒன்று அல்லது நல முரண்பாடு ஒன்றாக இருக்கக்கூடிய ஒன்று உங்களுக்குத் தெரியவந்தால், நீங்கள் அதைப் புகாரளிக்க வேண்டும்.

## தனிப்பட்ட வியாபார உறவுகள்

குறிப்பாக, Elevate Textiles நிறுவனத்திற்கு மற்ற வணிக நிறுவனத்திற்கும் இடையேயுள்ள பரிவர்த்தனைகள் சம்பந்தமாக நீங்கள் எடுக்கிற சுதந்திரமான தீர்மானத்தைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு பதவியிலோ அல்லது குறிப்பிடத்தக்க நலனைக் கொண்டோ, வேறு எந்த வணிக நிறுவனத்திலோ நீங்கள் இருக்கக்கூடாது. உங்கள் தனிப்பட்ட வணிக உறவுகள், நீங்கள் Elevate Textiles நிறுவனத்திற்காக எடுக்கிற முடிவுகளை ஒருபோதும் பாதிப்பதில்லை என்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும். மற்ற காரணிகள் இல்லாமல், பொதுவாக வர்த்தகம் செய்யப்படுகிற பங்குப் பத்திரங்களின் நிலுவையிலுள்ள வகையில் ஒரு சதவீதத்தை விடக் (1%) குறைவான அளவிற்கு வெறுமனே பங்குப் பத்திரங்களை வைத்திருப்பது ஒரு நலன் முரண்பாடாக அமையாது.

### உறவினர்களோடு வியாபாரம் செய்தல்

தனிப்பட்ட பலனுக்காக அல்லது ஒரு உறவினரின் பலனுக்காக Elevate Textiles நிறுவனத்தோடு வணிகத்தை நடத்துவதற்கு, போது ஆலோசகர் மற்றும் தலைமை இணக்க அதிகாரி அல்லது தலைமை மனிதவள அதிகாரியிடமிருந்து Elevate Textiles நிறுவனப் பணியாளர் முன் அனுமதி பெறவேண்டும்.

### பணிக்கொடைகள், பரிசுப் பொருட்கள், மற்றும் பொழுதுபோக்கு

நம்முடைய வழக்கங்களுக்கு அப்பால் செல்கிற அல்லது Elevate Textiles நிறுவனத்தோடு வணிகம் செய்வது குறித்த வாடிக்கையாளர் அல்லது சப்ளையரின் நிபந்தனையாகப் பார்க்கப்படக்கூடிய, பணம், பரிசுப் பொருட்கள், பொழுதுபோக்கு, அல்லது மற்ற அனுகூலங்கள் அல்லது கைமாறு எதையும் Elevate Textiles நிறுவனப் பணியாளர்கள் யாரும் பெறவோ அல்லது பெற ஒப்புக்கொள்ளவோ கூடாது. வணிக உறவுமுறைகளின் இயல்பான போக்கில் நியாயமான, அவ்வப்போதான அல்லது தற்செயலான பொருட்கள் அனுமதிக்கப்படுகின்றன. இது தொடர்பாக எந்தவொரு பணியாருக்கும் ஏதேனும் கேள்வி அல்லது கவலை இருந்தால், வழிகாட்டுதல் மற்றும் வழிநடத்தலுக்காக, பொது ஆலோசகர் மற்றும் தலைமை இணக்க அதிகாரி அல்லது தலைமை மனிதவள அதிகாரியை அணுக வேண்டும்.

### போட்டித் தகவல்களைச் சேர்த்தல்

முறையாகச் சேகரித்த வணிகத் தகவல்களுக்கு Elevate Textiles நிறுவனம் மதிப்பளிக்கின்றது. நமது போட்டியாளர்கள் குறித்த தகவல்களை, மற்றவர்களுக்கு தாராளமாகக் கிடைக்கிற பொது மூலங்களிலிருந்தே சேகரிக்க வேண்டும். Elevate Textiles நிறுவனத்தின் எந்தவொரு ஊழியர்களும் போட்டி தகவல்களைப் பெற உளவு பார்க்கவோ அல்லது திருடவோ கூடாது.

*உங்கள் பொறுப்புகள்*

- தனிப்பட்ட, தனிநபர் ஆதாயத்திற்கு மேற்பட்டு சட்டங்களுக்கும் நன்னெறிக் கோட்பாடுகளுக்கும் இணங்குதல்.
- உங்களது Elevate Textiles நிறுவனக் கடமைகள் அல்லது பொறுப்புகளோடு குறுக்கிடக்கூடிய வகையில் இன்னொரு வணிகத்தில் பதவி வகிக்கவோ அல்லது நிதிசார்ந்த நலனைக் கொண்டிருக்கவோ செய்யாதீர்கள்.
- Elevate Textiles நிறுவனத்திற்கும், உறவினர் ஒருவருவருக்கும் இடையே வணிகத்தை நடத்தாதீர்கள்.
- நல முரண்பாட்டுக் கொள்கைகளின் எந்த விதிமீறல்களையும் புகாரளித்திடுங்கள்.
- சப்ளையர்கள் அல்லது வாடிக்கையாளர்களோடு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் போது, மிதமான மதிப்பிற்கு மேலே கொடுக்கிற பரிசுகள் எதையும் ஏற்றுக் கொள்வதைத் தவிர்த்து விடுங்கள்.
- உதாரணத்தின் மூலமாக இணக்கம் மற்றும் நன்னெறிகளை மேம்படுத்துங்கள் - வேறு விதமாகச் சொல்வோமானால், நாணயத்தோடு செயல்படுவது என்றால் என்ன அர்த்தம் என்பதை உங்கள் பழக்க வழக்கத்தின் மூலமாகவே வெளிக்காண்பியுங்கள்.

## சர்வதேச வர்த்தகச் சட்டங்கள்

*Elevate Textiles* நிறுவனம் உலகெங்கிலும் வணிகத்தை நடத்துகிறது. சில நேரங்களில் ஒரு நாட்டில் எடுக்கிற செயல்பாடுகள், இன்னொரு நாட்டின் சட்டங்களின் கீழ் *Elevate Textiles* நிறுவனத்திற்கு சட்டச் சிக்கலை உண்டாக்கலாம். இது குறிப்பாக அமெரிக்கச் சட்டங்களின் கீழ் உண்மையாகிறது. போட்டிக்கு எதிரான மற்றும் வர்த்தக ஒழுங்குமுறைச் சட்டங்கள் சிக்கலானவையாகும் மேலும் அவற்றை இந்த வழிகாட்டியில் முழுமையாக விளக்கிச் சொல்ல முடியாது. இந்தக் காரணத்திற்காகத் தான், *Elevate Textiles* நிறுவனம் ஒருசில உலகளாவிய வர்த்தகத் துறைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உருவாக்கியிருக்கின்றது அதோடு தங்களது பணியை மேற்கொள்ளும் போது இத்தகைய சட்டங்களைச் சந்திக்க வாய்ப்புள்ள *Elevate Textiles* நிறுவன ஊழியர்களுக்கான கூடுதல் பயிற்சியையும் வழங்குகிறது. ஆயினும், இத்தகைய சட்டங்களின் கீழ் எழுகிற பிரச்சினைகள் குறித்ததோர் அடிப்படையான புரிந்து கொள்ளுதல் அனைத்து ஊழியர்களுக்கும் இருக்கின்றது என்பது *Elevate Textiles* நிறுவனத்திற்கு அவசியமாகின்றது.

### அயல்நாட்டு ஊழல் பழக்கங்கள் சட்டம்

*Elevate Textiles* இயங்கும் பல நாடுகளில், போட்டி அனுகூலத்தைப் பெறுவதற்காக லஞ்சம் அல்லது பிற முறையற்ற தூண்டுதல்களுக்குப் பணம் செலுத்துவதைத் தடைசெய்யும் தடுப்புச் சட்டங்கள் உள்ளன அல்லது ஒரு பெறுநரின் முடிவெடுத்தலில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவற்றுக்கான உதாரணங்களில், எந்தவொரு அமெரிக்க நிறுவனம் அல்லது அதன் உலகளாவிய துணை நிறுவனங்கள், இணை நிறுவனங்கள், பணியாளர்கள் அல்லது முகவர்கள் எவரும், அயல்நாட்டு அதிகாரிகள், அயல்நாட்டு அரசியல் கட்சிகள் அல்லது அவற்றின் அதிகாரிகளுக்கு, நேரடியாகவோ அல்லது மற்றொரு நபரின் வாயிலாக மறைமுகமாகவோ, *(i)* அது போன்ற அயல்நாட்டு அதிகாரியின் செயல் அல்லது முடிவில் பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கங்களுக்காக அல்லது *(ii)* வணிகத்தை அல்லது வணிக அனுகூலம் எதையும் பெறுவதற்காக அல்லது தக்கவைத்துக் கொள்வதற்காக பணம் கொடுப்பதைத் தடைசெய்கிற அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைச் சட்டம் *(U.S. Foreign Corrupt Practices Act, FCPA)* அடங்குகிறது. இங்கிலாந்தின் இலஞ்ச சட்டத்தில் *(UK Bribery Act, UKBA)* இரு அதிகாரிகளுக்கும் எதிரானதும் (அதாவது, ஈடுபடுகிற அரசாங்க அதிகாரிகள்), வர்த்தக ரீதியிலான லஞ்சத்திற்கும் எதிரான இதையொத்தத் தடைகள் உள்ளன. அநேக நிலைகளில், அமெரிக்காவில் அல்லது இங்கிலாந்தில் அயல்நாட்டு அதிகாரிகளாகக் கருதப்படாத நபர்கள் வேலை பார்க்கும் இடங்களை அரசாங்கம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சொந்தமாக வைத்திருக்கிற பட்சத்தில் அல்லது இயக்குகிற பட்சத்தில், அவர்களை *FCPA* சட்டம் அல்லது *UKBA* சட்டத்தின் நோக்கங்களுக்காக அயல்நாட்டு அதிகாரிகளாகக் கருதலாம். ஆகவே, பொருந்துகிற ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை மீறும் மற்றும் ஆபத்தை ஏற்படுத்துகிற செயல்பாடுகளில் ஈடுபடக்கூடிய, பணம் பெறுகிற அல்லது பணம்-அல்லாத பலன் ஒன்றைப் பெறுகிற நபர் ஒருவரின் அந்தஸ்தைத் தெரிந்து கொள்வதற்கும், அதே போல அயல் நாடுகளில் முகவர்களை உபயோகிப்பதற்கும் குறிப்பான கவனம் செலுத்த வேண்டும்.

*FCPA* மற்றும் *UKBA* சட்டங்களுக்கு ஒருசில வரம்புடைய விதிவிலக்குகளும், சட்டப் பாதுகாப்புகளும் பொருந்துகின்றன, ஆனால் கொடுக்கிற பணமானது, விதிவிலக்கு ஒன்றின் கீழ் அல்லது பாதுகாப்பின் கீழ் வரத் தகுதியடைகிறதா என்பது வழக்கமாகவே ஒரு சட்டக் கேள்வியாகத் தான் இருக்கின்றது. சில நேரங்களில், பயணம் அல்லது தங்குதல் செலவுகள் போன்ற “நியாயமான மற்றும் உண்மையான” செலவுகளுக்கு, அச்செலவு தயாரிப்புகள் அல்லது சேவைகளை விளக்கிச் சொல்வதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு, அல்லது ஒரு ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குத் தொடர்புடையவையாக இருந்தால், அயல்நாட்டு அதிகாரி ஒருவருக்குப் பணம் கொடுக்கலாம் அல்லது அவர் செலவழித்ததை அவருக்குத் திருப்பிக் கொடுத்து விடலாம். ஆயினும், ஒரு குறிப்பிட்ட செலவை கொடுக்க வேண்டுமா அதனை எந்தளவிற்குக் கொடுக்க வேண்டும் என்பதற்கு, ஒரு சட்ட மதிப்பீடு அவசியமாகும். *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள் அல்லது இணை நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், எந்த ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழும், கொடுக்கவுள்ள பணத்தின் சட்டத்திற்கு உட்படும் தன்மையை மதிப்பிட முயற்சிக்கக்கூடாது. அதற்குப் பதிலாக, அவர்கள் அயல்நாட்டு அதிகாரி ஒருவருக்கு அல்லது அவரின் நலனுக்காக கொடுக்கும் பணம் எதுவும் உட்பட, ஊழல் எதிர்ப்புக் கவலைகளை மறைமுகமாகத் தெரிவிக்கக் கூடிய பணம் எதையும் கொடுப்பதற்கு முன்பே *Elevate Textiles* பெருநிறுவன சட்டத்துறையில் ஆலோசனை பெறவேண்டும். *FCPA* அல்லது *UKBA* சட்டத்தின் கீழ் தனிநபர் ஒருவரை “அயல்நாட்டு அதிகாரி” ஒருவர் என்பதாகக் கருதலாமா என்பது குறித்த கேள்விகளை, *Elevate Textiles* பெருநிறுவனச் சட்டத்துறையில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

*உங்கள் பொறுப்புகள்*

- *FCPA, UKBA* சட்டங்கள் மற்றும் மற்ற ஊழல் எதிர்ப்பு விதிகளைப் புரிந்து கொள்வதற்கும், ஏற்ற நடவடிக்கையை எடுப்பதற்கும் *Elevate Textiles* பெருநிறுவனச் சட்டத்துறையில் ஆலோசனை பெறுங்கள்.
- அயல்நாட்டு அதிகாரி ஒருவர் மதிப்புடைய ஒன்றைத் தருமாறு நாடினால், *Elevate Textiles* பெருநிறுவனக் கூட்டாண்மையின் சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்.
- ஒரு வேளை இன்னொரு நிறுவனம் இதனைச் செய்திருக்கிறது என்பதாலேயே இப்பழக்கம் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்பதாக கருதாதீர்கள்.
- உங்கள் மேலாளர் மற்றும் *Elevate Textiles* பெருநிறுவனச் சட்டத்துறையின் அனுமதியில்லாமல், மதிப்புள்ள எதையும் அயல்நாட்டு அதிகாரி ஒருவருக்குக் கொடுக்கவோ அல்லது கொடுப்பதாக வாக்குறுதியளிக்கவோ செய்யாதீர்கள்.

### நம்பிக்கையின்மை மற்றும் நியாயமான போட்டி

*Elevate Textiles* நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும், நடவடிக்கைகளும், வர்த்தக விவகாரங்களும், அமெரிக்காவிலும், *Elevate Textiles* நிறுவனம் இயங்குகிற மற்ற அனைத்துப் பகுதிகளிலும் பொருந்துகிற அனைத்து நம்பிக்கைக்கு எதிரானமற்றும் நியாயமான போட்டிச் சட்டங்களுக்கு முழுமையாக இணங்கவே நடத்தப்படுகிறது என்பதை *Elevate Textiles* நிறுவனத்தின் கொள்கை உறுதிசெய்ய வேண்டும். போட்டியாளர்களோடு சட்டவிரோதமான ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளுதல் அல்லது சப்ளையர்களோடு, விநியோகஸ்தர்களோடு, அல்லது வாடிக்கையாளர்களோடு சட்டவிரோதமான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளுதல் உட்பட, ஆனால் இவை மட்டும் தான் என்றில்லாமல், போட்டியிடும் தன்மைக்கு தீங்கிழைக்கிற சட்டவிரோத பழக்கவழக்கம் எதிலும் *Elevate Textiles* நிறுவனம் ஈடுபடாது. என்னென்ன தயாரிப்புகளைக் கொடுப்பது, அவற்றை எங்கே மற்றும் எவ்விதம் கொடுப்பது, மற்றும் அவற்றுக்கு எவ்வளவு கட்டணம் விதிப்பது போன்றவை குறித்த தனது சொந்தமான, சுதந்திரமான முடிவுகளை எடுப்பதே *Elevate Textiles* நிறுவனத்தின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது மேலும் அவ்வாறே எப்போதும் இருக்கும்.

விலைகள், விலையிடல் கொள்கைகள், தள்ளுபடிகள், படிகள், அல்லது வேறு ஏதேனும் விற்பனை விதிகள் சம்பந்தமாக போட்டியாளரின் பிரதிநிதி எவருடனும் எவ்வித ஒப்பந்தமும் (அல்லது ஒப்பந்தம் செய்வதற்கான முயற்சிகளும்) இருக்கக் கூடாது என்பதாகவே *Elevate Textiles* நிறுவனக் கொள்கை சொல்கிறது. கூடுதலாக, போட்டியாளர்கள் வாடிக்கையாளர்கள், சந்தைகள் அல்லது பிரதேசங்களைத் தங்களுக்குள் ஒதுக்கீடு செய்து கொள்வதற்கோ அல்லது சப்ளையர் அல்லது வாடிக்கையாளர் எவரையும் புறக்கணிப்பதற்கோ, அல்லது போட்டிக்குத் தீங்கு விளைவிக்கிற வேறு ஏதேனும் நடவடிக்கையை எடுப்பது அல்லது எடுக்காமல் இருப்பதற்கோ ஒப்புக் கொள்ளாமல் இருந்து கொள்ளலாம்.

எந்தச் சட்டத்திலும் இருப்பதைப் போன்றே, இச்சட்டத்திற்கும் இணங்கத் தவறுவது, *Elevate Textiles* நிறுவனத்திற்கும், அதன் அதிகாரிகளுக்கும், கூட்டாளிகளுக்கும் குறிப்பிடத்தக்க அளவிற்கு ஆபத்துக்களை விளைவிக்கும். நம்பிக்கைக்கு எதிரான சட்டத்தை மீறுவதற்கான அபராதங்கள் குறிப்பாகக் கடுமையானவையாக இருக்கலாம். மேலும் சம்பந்தப்பட்ட இரு நபர்கள் மீதும், மொத்தமாக *Elevate Textiles* நிறுவனத்தின் மீதும் நீண்டகாலத் தாக்கங்களை அவை உண்டாக்கலாம். அதற்கேற்ப, அனைத்து *Elevate Textiles* நிறுவன ஊழியர்களும், இந்த நம்பிக்கைக்கு எதிரான கொள்கைக்கு இணங்கி நடப்பதற்குக் கடமைப்பட்டுள்ளார்கள். பொருந்துகிற அனைத்து நம்பிக்கைக்கு எதிரான சட்டங்களுக்கும் இணங்கவே *Elevate Textiles* நிறுவன வணிகம் நடத்தப்படுகின்றது என்பதை உறுதி செய்வதற்கு ஒவ்வொரு அதிகாரியும், கூட்டாளியும் பொறுப்பானவர்களாக இருக்கிறார்கள்.

நம்பிக்கைக்கு எதிரான சட்டம் மற்றும் நியாயமான போட்டிச் சட்டங்கள், ஒங்கு சந்தை நிலையை உபயோகித்து, அதனை ஒற்றைமயப்படுத்தலை அல்லது விலைகளைக் கட்டுப்படுத்துவதை அல்லது இயற்கையான சந்தை விசைகளிலினால் அல்லாமல் தன்னிச்சையாகப் போட்டியாளர்கள் அந்தச் சந்தைக்குள் நுழைவதைத் தவிர்ப்பதைத் தடை செய்கின்றன.

போட்டிச் சட்ட இணக்கம் என்பது, ஒரு சிக்கலானதும், சட்டத்தின் உயர்ந்தளவு தொழில்நுட்பமான பகுதியுமாகும். நம்பிக்கைக்கு எதிரான சட்ட இணக்கம் குறித்து உங்களுக்குக் கேள்விகள் ஏதுமிருந்தால், தயவுசெய்து உங்கள் மேற்பார்வையாளர் அல்லது *Elevate Textiles* நிறுவனக் பெருநிறுவனச் சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள். இந்தக் கொள்கையை மீறுவதாகக் கண்டுபிடிக்கப்படுகிற *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள், வேலைநீக்கம் வரையானதும், அது உள்ளிட்டதுமான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் மேலும் அவர்கள் குடிமையியல் மற்றும் குற்றவியல் அபராதங்களுக்கும் உட்படுத்தப்படலாம்.

*உங்கள் பொறுப்புகள்*

- விலைகள் அல்லது தயாரிப்புகளை, முறையாகவோ அல்லது முறைப்படி அல்லாமலோ, *Elevate Textiles* நிறுவனத்தின் போட்டியாளர்களின் பணியாளர்கள் எவருடனும் ஒருபோதும் விவாதிக்காதீர்கள்.
- *Elevate Textiles* நிறுவனப் போட்டியாளர்கள் குறித்த உண்மையில்லாத அல்லது உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை ஒருபோதும் விடுக்காதீர்கள்.

வர்த்தகத் தடைகள்

எப்போதாவது, அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதில் அல்லது அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் அரசாங்கள் வர்த்தக அல்லது பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. *Elevate Textiles* நிறுவன அமெரிக்கச் செயல்பாடுகள், அமெரிக்க ஏற்றுமதிச் சட்டங்களுக்கு உட்பட்டவையாகும். அச்சட்டங்கள் தடைசெய்யப்பட்டதோர் நாட்டிற்கு அல்லது கடைமுனைப் பயனருக்கு, அயல்நாட்டிருந்து தயாரிப்புகளை மறு-ஏற்றுமதி செய்வது உட்பட, முதன்மையாக *Elevate Textiles* நிறுவனத் தயாரிப்புகள் போய்ச்சேரும் இடங்களையும், அவற்றை உபயோகிக்கும் கடைமுனைப் பயனரையும் கட்டுப்படுத்துகின்றன. சில நிலைகளில், தயாரிப்புகள் எங்கிருந்து வருகின்றன என்பதைப் பொருட்படுத்தாமல், ஒருசில இடங்களுக்கு எந்தத் தயாரிப்புகளையும் அனுப்பி வைக்கவே கூடாது. ஒருசில நாடுகளோடு செய்கிற வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தோற்றுவித்துள்ள அனைத்துச் சட்டங்களுக்கும் இணங்கி நடப்பதே *Elevate Textiles* நிறுவனத்தின் கொள்கையாக உள்ளது. மேலும் ஏற்றுமதிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து *Elevate Textiles* நிறுவன ஊழியர்களும் தனது வணிகச் செயல்பாடுகளுக்குப் பொருந்துகிற அனைத்து ஒழுங்குமுறைகளையும் நடைமுறைகளையும் நன்கு தெரிந்து வைத்துக் கொள்வதும் முக்கியமானதாகும்.

*உங்கள் பொறுப்புகள்*

- அமெரிக்க விற்பனை அல்லாதவற்றுக்கு ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு விதிகள் பொருந்தாது என்பதாக கணித்துக் கொள்ளாதீர்கள்.
- வர்த்தகச் சட்டங்களுக்கு இணங்கி நடப்பது குறித்த கேள்விகள் அல்லது கவலைகள் ஏதும் உங்களுக்கிருந்தால், *Elevate Textiles* நிறுவனக் பெருநிறுவனச் சட்டத்துறையில் ஆலோசனை பெறுங்கள்.

புறக்கணிப்பு-எதிர்ப்பு

அமெரிக்க புறக்கணிப்பு எதிர்ப்புச் சட்டங்கள், அமெரிக்க அரசாங்கம் விதிக்காததோர் புறக்கணிப்பை ஆதரிக்கும் முகமாக இன்னொரு நபரோடு வணிகம் செய்ய மறுப்பது அல்லது மற்ற நடவடிக்கைகளை எடுப்பது போன்றவற்றிலிருந்து *Elevate Textiles* நிறுவனத்தைத் (இந்நிறுவனம் கட்டுப்படுத்துகிற அயல்நாட்டுத் துணை நிறுவனங்கள் மற்றும் இணைப்பு நிறுவனங்கள் உட்பட) தடை செய்கின்றது. ஒரு புறக்கணிப்பில் ஈடுபடுமாறு *Elevate Textiles* நிறுவனமும், இந்நிறுவனம் கட்டுப்படுத்துகிற அயல்நாட்டுத் துணை நிறுவனங்களும் பெறுகிற வேண்டுகோள்கள் எதையும் அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிவிப்பது அமெரிக்கச் சட்டத்திற்கு அவசியமாகின்றது. புறக்கணிப்பு எதையும் மேற்கொண்டு எடுத்துச் செல்கிற அல்லது ஆதரவு தெரிவிக்கிற நடவடிக்கை எதையும் எடுக்குமாறு அல்லது நடவடிக்கையை எடுக்காமல் இருக்குமாறு ஒரு எழுத்துப்பூர்வமான அல்லது வாய்மூலமான வேண்டுகோளை *Elevate Textiles* நிறுவனப் பணியாளர் எவரும் பெற்றுக் கொள்கிற பட்சத்தில், அவ்வேண்டுகோளுக்கு எவ்விதம் பதிலளிப்பது என்பது குறித்த வழிகாட்டுதலுக்கு அவர் அதனை அப்போதே பெருநிறுவனச் சட்டத்துறைக்கு அறிவிக்க வேண்டும்.

*உங்கள் பொறுப்புகள்*

- ஒரு புறக்கணிப்பில் பங்கேற்குமாறு பெறப்படுகின்ற வேண்டுகோள்கள் எதையும், *Elevate Textiles* நிறுவனக் பெருநிறுவனச் சட்டத்துறைக்குத் தெரிவிக்கவும்.

பாதுகாப்பு

எங்களது உற்பத்தி, இருப்பு வைத்தல் மற்றும் அனுப்பி வைத்தல் நடைமுறைகளுக்குத் தொடர்புடையதாக இருக்கையில், மிகச்சிறந்த அணுகல் பழக்கங்கள், தனிப்பட்ட பழக்கங்கள், நடைமுறை சார்ந்த பழக்கங்கள் மற்றும் இயல்ரீதியிலான பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இணங்கி நடப்பதைக் கடைபிடிப்பதற்கு *Elevate Textiles* நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

சரக்குப் பட்டியலில் வெளியிடாத, வாங்கிய மற்றும் உற்பத்தி செய்தவை இருவிதத்திலுமான சரக்குகளை (உதாரணமாக, போதை மருந்துகள் மற்றும் மற்ற சட்டவிரோதப் பொருட்கள்) நிறுவனத்தின் தயாரிப்புகளை அனுப்பி வைக்கையில் அவற்றோடு சேர்ப்பதற்கு எதிராக பாதுகாப்பதற்கான, அமெரிக்காவிற்குப் பொருட்களை அனுப்பிவைப்பதற்கான பயங்கரவாதத்திற்கு எதிரான சுங்க-வர்த்தகக் கூட்டுத் *(Customs-Trade Partnership Against Terrorism, C-TPAT)* தேவைகளுக்கு இணங்கி நடப்பது உட்பட, ஆனால் இவை மட்டும் என்றில்லாமல், பாதுகாப்பு நடைமுறைகளை *Elevate Textiles* நிறுவன அலுவலகங்கள் மற்றும் அதிகாரிகள் கடைப்பிடிப்பர்.

உலகெங்கிலும் உள்ள உரிய சுங்க அதிகாரிகளோடு சேர்ந்து பணியாற்றுகையில், *Elevate Textiles* நிறுவன அலுவலகங்கள் உரிய அனைத்து சுங்கச் சட்டங்களோடும் இணங்கிச் செல்லும் மேலும் சட்டத்திற்கு எதிராக தயாரிப்புகளை அனுப்பி வைப்பதற்கு எதிராக பாதுகாப்பளிக்கிற திட்டங்களை நிலைநாட்டி அதனைப் பராமரித்துக் கொள்ளும்.

## அரசியல் செயல்பாடு மற்றும் பங்களிப்புகள்

*Elevate Textiles* நிறுவனத்தின் நிதி மற்றும் மற்ற வளங்களை, அரசியல் பதவிக்காகப் போட்டியிடுகிற எந்தவொரு வேட்பாளருக்கும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு தெரிவிக்கும் நோக்கத்திற்காகவோ, எந்தவொரு தனிநபரும் செய்த நேரடியான அல்லது மறைமுகமான அரசியல் பங்களிப்புகள் எதற்கும் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காகவோ அல்லது அரசாங்க அதிகாரிகளுக்கோ அல்லது பணியாளர்களுக்கோ பணம் கொடுப்பது, அன்பளிப்புகள் அல்லது பரிசுப்பொருட்கள் கொடுக்கும் நோக்கத்திற்காகவோ உபயோகிக்கக் கூடாது. *Elevate Textiles* நிறுவன

ஊழியர்கள் அனைவரையும், தங்களது சொந்த நேரம் மற்றும் வளங்களைக் கொண்டும் கூட, அரசியல் விஷயங்களில் தனிப்பட்ட விதமாக ஈடுபடுவதை, *Elevate Textiles* நிறுவனம் ஊக்குவிப்பதில்லை.

### சட்டத்திற்கு இணங்கி நடத்தல்

இந்நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளும், நடவடிக்கைகளும், வர்த்தக விவகாரங்களும், அமெரிக்காவிலும், *Elevate Textiles* நிறுவனம் இயங்குகிற மற்ற அனைத்துப் பகுதிகளிலும் பொருந்துகிற அனைத்து சட்டங்களுக்கு முழுமையாக இணங்கவே நடத்தப்படுகிறது என்பதை உறுதி செய்வதே *Elevate Textiles* நிறுவனத்தின் கொள்கையாகும்.

எழுத்திலும், எண்ணத்திலுமான இரண்டிலுமே, சட்டத்திற்குக் கீழ்படிந்து நடப்பதே *Elevate Textiles* நிறுவன நன்னெறித் தரநிலைகளாகும். பொருந்துகிற அனைத்து சட்டங்கள் குறித்த விவரங்கள் நாம் அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதில்லை என்கிற போதிலும், எப்போது மேற்பார்வையாளர்கள், மேலாளர்கள் அல்லது *Elevate Textiles* நிறுவனக் பெருநிறுவனச் சட்டத்துறையிடமிருந்து ஆலோசனையை நாடுவது என்பதைத் தீர்மானிக்கப் போதுமான அளவிற்குத் தெரிந்து வைத்துக் கொள்வது முக்கியமானதாகும்.

### தரம் மற்றும் பரிசோதனை

வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதும், அவற்றை விஞ்சுகிறதுமான உலகத்தரமான தயாரிப்புகளையும், சேவைகளையும் வழங்குவதற்காக *Elevate Textiles* நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. உலகத்தரம் என்பது, நமது வெற்றிக்கு மிக முக்கியமானதாகும், மேலும் அதனை நடைமுறைகளைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதன் வாயிலாகவே அடைகிறோம், அதோடு அது குறைந்தபட்ச வித்தியாசத்தோடு இலக்கின்பால் நிற்பது என்றே வரையறுக்கப்படுகிறது. அனைத்துப் பரிசோதனை ஆவணமாக்கலையும், துல்லியமாகவும், உரிய நேரத்திலும் பூர்த்திசெய்ய வேண்டும்.

# *Elevate Textiles* நிறுவனப் பணியிடத்தில் நேர்மை

*Elevate Textiles பணியாளர்களாக நாம் எவ்விதம் வாழ்கிறோம் மற்றும் எவ்விதம் பணியாற்றுகிறோம் என்பதைக் கட்டுப்படுத்துகிற விதிகள்*

### மக்களை நியாயமாக நடத்துதல்

#### சம வாய்ப்புப் பணியமர்த்தும் நிறுவனம்

*Elevate Textiles* நிறுவனம், சமமான பணிவாய்ப்பு (அதோடு அமெரிக்காவில், உறுதியான நடவடிக்கையுடன்) தருகிறதோர் நிறுவனமாகும். தகுதியுடைய அனைத்துக் கூட்டாளிகளுக்கும், தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும், இனம், நிறம், மதம், பாலினம், தேசியப் பூர்வீகம், வயது, உடல் இயலாமை, அனுபவ நிலை அல்லது உரிய சட்டம் பாதுகாக்கிற மற்ற எந்த வகைப்பாட்டிற்கும் சட்ட விரோதமான கரிசனை தராமல், வேலைக்கான சம வேலைவாய்ப்பினை வழங்குவதே *Elevate Textiles* நிறுவனத்தின் கொள்கையாக உள்ளது. இந்தக் கொள்கை, வேலைக்கு ஆட்களை அமர்த்துதல், பலன்கள், பணி மாற்றம், இழப்பு, பணி உயர்வு, வேலைக்கு வராமல் இருந்த விடுப்பு, பணி நீக்கம், பணிக்குச் செல்லாமல் இருத்தல் போன்றவை உட்பட, ஆனால் இவை மட்டும் தான் என்றில்லாமல், வேலைவாய்ப்பின் அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பொருந்துகின்றது.

#### பாகுபாடு காண்பிக்காமை / துன்புறுத்தல் கொடுக்காமை

சமமான பணிவாய்ப்பு என்ற நமது குறிக்கோள்களை அடைவதிலும், சட்டவிரோதமான வன்கொடுமை அல்லது பாகுபாடு காண்பித்தல் எதற்கும் எதிராக பூஜ்ஜிய அளவு சகிப்புத் தன்மை ஆகியவற்றில் *Elevate Textiles* ஊழியர்கள் அனைவரும் தங்களது ஆதரவைத் தருமாறு நாங்கள் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். விதிமீறல் எதுவும் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும். மேலும் அது போன்ற பழக்கவழக்கத்தில் ஈடுபடுகிற *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள், மேலாளர் அல்லது மேற்பார்வையாளர் உட்பட்ட எவரும், பணிநீக்கம் வரையிலான மற்றும் பணிநீக்கம் உள்ளிட்ட உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு உட்படுத்தப்படுவார்கள்.

அனைத்து *Elevate Textiles* ஊழியர்களும், கண்ணியத்தோடும், மரியாதையோடும் நடத்தப்படுவதற்குத் தகுதியுடையவர்கள். ஆகவே இனம், நிறம், மதம், பாலினம், தேசியப் பூர்வீகம், வயது, உடல் இயலாமை, அனுபவ நிலை அல்லது உரிய சட்டம் பாதுகாக்கிற மற்ற எந்த வகைப்பாட்டின் அடிப்படையில் அல்லது அது தொடர்பான எந்த வகையான சட்ட விரோதமான வன்கொடுமை, மிரட்டல் மற்றும் வற்புறுத்தல் இல்லாத பணிச்சூழலை வழங்குவதற்கு இந்நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது. அதுபோன்ற பழக்கவழக்கமானது, அனைத்து *Elevate Textiles* நிறுவன ஊழியர்களுக்கும் பரஸ்பர மரியாதை என்ற நமது இலட்சியத்திற்கு ஒத்ததாக இல்லாமல் இருக்கின்றது. மேலும் அதனைச் சகித்துக் கொள்ள முடியாது.

முறையற்ற வன்கொடுமை மற்றும் மற்ற தடைசெய்த பழக்க வழக்கங்களில் பின்வருபவை அடங்குகின்றன ஆனால் இவை மட்டும் தான் என்றில்லை:

- ஒரு நபரின் தோற்றம், உடல் அல்லது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து வரவேற்கத்தகாத விமர்சனங்களைக் கூறுதல்
- கோபமூட்டுகிற அல்லது துஷ்பிரயோகமான உடல் ரீதியிலான தொடுதல்
- வரவேற்கத்தகாத, கோபமூட்டுகிற பட்டப் பெயர்கள் அல்லது சிறுபிள்ளைத்தனமான பேச்சுகளின் உபயோகம்

- கோபமூட்டுகிற நகைச்சுவைகள் அல்லது வரவேற்கத்தகாத குத்தல் பேச்சுகள், கேவலமான விமர்சனங்கள் அல்லது இனம், நிறம், மதம், பாலினம், தேசியப் பூர்வீகம், வயது, ஊனம், சாதனை நிலை அல்லது உரிய சட்டம் பாதுகாக்கிற மற்ற எந்த வகைப்பாடு சம்பந்தமான அச்சுறுத்தல்
- பாலியல் செயல்பாடுகள், இனம், நிறம், மதம், பாலினம், தேசியப் பூர்வீகம், வயது, ஊனம், சாதனை நிலை அல்லது உரிய சட்டம் பாதுகாக்கிற மற்ற எந்த வகைப்பாடு ஆகியவை ஒருவரின் வேலை, பணி உயர்வு, செயல்திறன் மதிப்பாய்வு அல்லது வேலை பார்க்கும் நிலைமைகளைப் பாதிக்கிற ஆலோசனை எதுவும்
- கோபமூட்டுகிற பொருட்களை அல்லது படங்களைக் காட்சிக்கு வைத்தல், வினியோகித்தல் அல்லது சுற்றறிக்கைக்கு விடுதல்; அல்லது
- சில *Elevate Textiles* ஊழியர்களுக்கு ஆட்சேபகரமானதாக இல்லாத போதிலும், மற்றவர்களால் நியாயமான அளவிற்குக் கோபமூட்டுவதாக அல்லது பகையுள்ளதாக கருதப்படக்கூடியதோர் பணிச்சூழலை உருவாக்கிற மற்ற நடத்தை. பால் ரீதியிலான வன்கொடுமை, குறிப்பாக, பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேலானவை நடைபெறும் போது, வரவேற்கத்தகாத பால் ரீதியிலான கைமீறிய செயல்கள், பால் ரீதியிலான அனுகூலங்களுக்கான வேண்டுகோள்கள், அல்லது மற்ற வாய் வார்த்தை மூலமான அல்லது உடல் ரீதியிலான நடத்தையைக் கொண்டிருக்கக் கூடியது:
    - அது போன்ற நடத்தைக்கு உட்படுவது, அல்லது அதனை நிராகரிப்பது அல்லது சகித்துக் கொள்வது என்பது, ஒரு நபரின் வேலைவாய்ப்பிற்கான வெளிப்படையான அல்லது மறைமுகமான நிபந்தனை அல்லது விதியாக ஆக்கப்படுகின்றது;
    - அது போன்ற நடத்தைக்கு உட்படுவது, அல்லது அதனை நிராகரிப்பது அல்லது சகித்துக் கொள்வது என்பது, பணி உயர்வு, பணி இறக்கம், பணி நீக்கம், அல்லது சம்பளம் போன்ற வேலைவாய்ப்பு முடிவு ஒன்றின் அடிப்படைக்காக உபயோகிக்கப்படுகின்றது; அல்லது
    - அது போன்ற நிபந்தனை, நியாயமற்ற விதத்தில், கூட்டாளி ஒருவரின் வேலைச் செயல்திறனோடு குறுக்கிடுகின்றது அல்லது ஒரு பகைமிகுந்த, அச்சுறுத்துகிற அல்லது கோபமூட்டுகிற பணிச் சூழலை உருவாக்குகின்றது.

மேற்படி உருப்படிகள், முறையற்றதோர் பழக்கவழக்கத்திற்கான உதாரணங்களேயாகும். வரவேற்கத்தகாத துஷ்பிரயோகம், பாகுபாடு காண்பித்தல் அல்லது துன்புறுத்தலின் வடிவம் என்னவாக இருந்தாலும், அதனை *Elevate Textiles* நிறுவனம் கடுமையானதாகவே எடுத்துக் கொள்கின்றது. அதற்கு *Elevate Textiles* நிறுவனத்தில் இடமேதும் இல்லை அவ்வளவுதான்.

### போதை மருந்து இல்லாத பணியிடம்

பணியிடத்தில் சட்டவிரோத போதைப்பொருள் நடவடிக்கையில் ஈடுபடுவதைத் அனைத்து ஊழியர்களும் தவிர்ப்பதை உறுதிசெய்வதற்கு *Elevate Textiles* உறுதிபூண்டுள்ளது. இந்த இலக்கை அடைவதற்கு, போதைப்பொருள் தடுப்புக் கொள்கையை வகுத்துள்ளது.

இந்தக் கொள்கையை மீறுகிற பணியாளர் எவருக்கும் எதிராக, பணிநீக்கம் வரையான, மற்றும் பணிநீக்கம் உள்ளிட்ட உரிய ஒழுங்கு நடவடிக்கையை *Elevate Textiles* நிறுவனம் எடுக்கும். உங்கள் பகுதி சட்டம் அனுமதிக்கிற இடங்களில், சந்தேகத்திற்கிடமான சட்டவிரோத போதை மருந்து உபயோகம் அல்லது கட்டுப்படுத்திய மருந்துப் பொருளைத் துஷ்பிரயோகம் செய்ததன் காரணமாக வேலை செய்வதற்குத் தகுதியில்லாதவராகத் தோன்றுகிறாரா என்பதைப் பார்க்க எந்த *Elevate Textiles* நிறுவனப் பணியாளரையும் சோதித்துப் பார்ப்பதற்கான உரிமை *Elevate Textiles* நிறுவனத்திற்கு உள்ளது.

அனைத்து *Elevate Textiles* நிறுவன ஊழியர்களுக்கும், இந்தக் கொள்கையின் தெரிந்த எந்த மற்றும் அனைத்து அல்லது சந்தேகத்திற்கிடமான விதிமீறல்களையும் உரிய மனித வளத்துறை அதிகாரியிடம் அறிவிப்பதற்கான உறுதியான கடமை உள்ளது.

### மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பழக்கங்கள்

*Elevate Textiles* நிறுவனம், தனது வழங்கல் சங்கிலி முழுவதிலும், அடிமைத்தனம் மற்றும் ஆட்கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது, இதில் இந்நிறுவனத்தின் உலகளாவிய உற்பத்தி மற்றும் விநியோக அலுவலகங்களும் அடங்குகின்றன. மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் நடைமுறைகள் சம்பந்தமாக, தனது ஊழியர்கள், ஒப்பந்ததாரர்கள், சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளிகள் ஆகியோர் பொருந்துகிற அனைத்துச் சட்டத் தேவைகளுக்கும் இணங்கி நடக்க வேண்டும் என்று *Elevate Textiles* நிறுவனம் எதிர்பார்க்கிறது.

### குழந்தைத் தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர்

*Elevate Textiles* நிறுவனம், தனது பணியிடத்தில் குழந்தைகளைச் சட்ட விரோதமாகப் பணியமர்த்துவதில் ஈடுபடாது அல்லது அதனைக் கண்டுகொள்ளாமல் விடாது அல்லது கட்டாயப் பணியாளர் முறையில் ஈடுபடாது அல்லது அதனைக் கண்டுகொள்ளாமல் விடாது. *Elevate Textiles* நிறுவனத்தில் வேலைவாய்ப்புக்கான குறைந்தபட்ச வயது 16 வயதாக உள்ளது. இது குறைந்தபட்ச அல்லது கட்டாயப் பள்ளிப் படிப்பின் வயதாகும். ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தையும் நாங்கள் ஆதரிக்கிறோம்.

### பொறுப்பான ஆட்சேர்ப்புக்கான உறுதிப்பாடு

நமது வழங்கல் சங்கிலியில் உள்ள பணியாளர்கள் நியாயமாக நடத்தப்படுவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். இந்தத் தொடர்ச்சியான முயற்சியின் ஒரு பகுதியாக, தயாரிப்புகளைக் கொள்முதல் செய்கின்ற நாடுகளில் கட்டாயத் தொழிலாளருக்கு வழிவகுக்கும் நிலைமைகளை அகற்றுவதற்கு நமது ஒப்பந்தக்காரர்கள், சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்களுடன் இணைந்து செயல்படுகிறோம்.

நமது பணியாளர்களும் நமது வழங்கல் சங்கிலிக் கூட்டாளர்களும் பின்வரும் வகையில் பணி நிலைமைகளை உருவாக்குவதை உறுதி செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்:

- எந்தத் தொழிலாளர்களும் பணியிடங்களால் பாதிக்கப்படாமல் இருத்தல்;
- தொழிலாளர்கள் தங்களின் பயண ஆவணங்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் மற்றும் முழுச் சுதந்திரத்துடன் இயங்குதல்; மற்றும்
- தங்கள் தாய்நாட்டை விட்டுச் செல்லும்போது தனது பணியின் அடிப்படை விதிமுறைகள் குறித்து தகவலறிந்து இருத்தல்.

### வேலை நேரங்கள்

பொருந்தக்கூடிய சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வழக்கமான மற்றும் கூடுதல் நேர நேரங்களை விட அதிகமாக நேரத்திற்கு *Elevate Textiles* கூட்டாளர் வேலை செய்யக்கூடாது. விதிவிலக்கான சூழ்நிலைகளில் தவிர, ஒவ்வொரு ஏழு நாள் காலகட்டத்திலும் அனைத்து கூட்டாளர்களுக்கும் தொடர்ச்சியாக 24 மணிநேர ஓய்வு அனுமதிக்கப்பட வேண்டும். எல்லா மிகைப் பணியும் பரஸ்பர ஒப்புதலுடன் இருக்க வேண்டும். மிகைப் பணி நேரங்களை *Elevate Textiles* கவனமாகக் கண்காணித்து, அனைத்து மிகை நேர வேலைகளையும் கூடுதல் கட்டண விகிதத்தில் ஈடுசெய்யும். விதிவிலக்கான சூழ்நிலைகளில் தவிர, ஒரு வாரத்தில் வழக்கமான மற்றும் மிகைப் பணி நேரங்களின் கூட்டுத்தொகை 60 மணி நேரத்திற்கு மேல் இருக்காது.

### சம்பளங்கள்

தனது வணிக இடங்கள் ஒவ்வொன்றிலும் நிலவுகிற சம்பளங்களோடு போட்டியிடும் விதத்தில் சம்பளம் வழங்குவதற்கு *Elevate Textiles* நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ஆனால் அந்தச் சம்பளங்கள் தனது செயல்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் பொருந்துகிற சட்டங்களின்படி

ஒருபோதும் உங்கள் பகுதிக் குறைந்தபட்ச சம்பளத்தை விடக் குறைவாக இருக்காது என்பதை உறுதிசெய்து கொள்ளும். அனைத்து சம்பளம் மற்றும் வேலை நேர விதிவிலக்குப் பெறாத கூட்டாளிகள், அவ்வியக்கத்திற்குப் பொருந்துகிற உங்கள் பகுதி சட்டங்களின் அடிப்படையில் உரிய கூடுதல் வேலை நேர ஊதியத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

பணியிட அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறை

பணியில் இருக்கும்போதோ *Elevate Textiles* நிறுவனச் சொத்தில் இருக்கும்போதோ, *Elevate Textiles* நிறுவன ஊழியர்களுக்கு, வாடிக்கையாளர்களுக்கு, விற்பனையாளர்களுக்கு, அல்லது மற்ற தனிநபர்களுக்கு எதிராகச் செய்யப்படும் அச்சுறுத்தல்கள், அச்சுறுத்தும் பழக்கவழக்கங்கள், பகையுண்டாக்கும் செயல்கள், அல்லது வன்முறைச் செயல்கள் தடை செய்யப்படுகின்றன. கூடுதலாக, பணியில் இல்லாத போது கூட்டாளிகளுக்கு எதிராகச் செய்கிற அச்சுறுத்தல்கள், அச்சுறுத்தும் பழக்கவழக்கங்கள், பகையுண்டாக்கும் செயல்கள், அல்லது வன்முறைச் செயல்களும் தடை செய்யப்படுகின்றன. இந்தக் கொள்கையை மீறுகிற நபர், பணிநீக்கம் வரையிலான மற்றும் பணிநீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

கூட்டு பேரம்

பணியாளர்கள் சொல்வதைக் கேட்பதற்கும், கூட்டாகப் பேரம் பேசுவதற்கும் அவர்களுக்குள்ள உரிமைகளை *Elevate Textiles* நிறுவனம் அங்கீகரித்து, அதற்கு மதிப்பளிக்கின்றது. எங்களது கூட்டாளிகள் தங்களுக்குப் பிரதிநிதியாகச் செயல்படுவதற்கு, வர்த்தக யூனியன்கள், வர்த்தகச் சங்கங்கள் மற்றும் மற்ற அமைப்புகளைத் தேர்ந்தெடுப்பார்கள் என்றால், நல் விசுவாசத்தில் அவர்களோடு சேர்ந்து அல்லது மற்றபடி பொருந்துகிற சட்டம் கோருகிறபடி, உரிய சட்ட வடிவிற்குள் உழைக்கவே நாங்கள் நாடுகிறோம்.

## மோசடியான நடத்தை

ஒரு பரிவர்த்தனையில் இன்னொரு நபரை அல்லது வணிக அமைப்பை வேண்டுமென்றே வஞ்சிக்கிற அல்லது மோசடி செய்கிற *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள், *Elevate Textiles* நிறுவனம் வணிகம் செய்கிற அனைத்திலும் இல்லை என்றாலும், பெரும்பாலான ஆட்சி எல்லைகளின் குற்றவியல் மற்றும் குடிமையியல் சட்டங்கள் இரண்டையும் மீறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது. கூடுதலாக, அதுபோன்ற வஞ்சனையான பரிவர்த்தனைகளைச் சுற்றிலும் தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் அல்லது தபால் அஞ்சல் வழியாக நடைபெறுகிற விவாதங்கள் அம்மோசடி நடந்ததாகக் கோருவதை உறுதிப்படுத்தலாம். மோசடி குறித்த அமெரிக்கச் சட்டங்கள் பரந்த செயல் விளைவுகளையுடையவை. மேலும் அவற்றை மீறி நடப்பது, அந்த *Elevate Textiles* நிறுவன ஊழியர்களைக் கடுமையான அபராதங்கள் மற்றும் சிறை தண்டனைக்கு உட்படுத்தும். அதுபோன்ற கடப்பாடு எதையும் தவிர்ப்பதற்கு, வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்கிற சலுகைகளில், அரசாங்கங்கள் அல்லது வங்கிகள் எதற்கும் கொடுக்கும் கோப்புகளில் அல்லது அறிக்கைகளில், அல்லது அதையொத்த ஆவணங்கள் எதிலும், *Elevate Textiles* நிறுவனத் தயாரிப்புகள் சம்பந்தமாக வேண்டுமென்றே தவறான பிரதிநிதித்துவம் எதுவும் செய்யவில்லை என்பதைப் பார்த்துக் கொள்ள *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள் பெரிதும் கவனமெடுத்துக் கொள்ள வேண்டும். மோசடியான நடத்தை எதையும் *Elevate Textiles* நிறுவனம் கண்டுகொள்ளாமல் விடாது மேலும் அனைத்து *Elevate Textiles* நிறுவன ஊழியர்களும் பொருந்துகிற சட்டங்கள் அனைத்திற்கும் ஏற்பவே செயல்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகும்.

## சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள்

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

பணியிடச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக, அனைத்து மத்திய, மாகாண, மாநில மற்றும் அவ்வப்பகுதிக்குரிய சட்டங்களைப் பின்பற்றுவதே *Elevate Textiles* நிறுவனக் கொள்கையாக உள்ளது. *Elevate Textiles* கூட்டாளிகள், தங்களது பணிகளைச் செய்கையில், அனைத்து சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி நடப்பதற்கும், தொடர்ச்சியாக பாதுகாப்பைக் கடைபிடிப்பதற்கும் பொறுப்பானவர்களாவர். *Elevate Textiles* நிறுவனம், பாதுகாப்பான பணி நிலைமைகளை ஏற்படுத்தித் தரவும், அனைத்து சாதனம், கருவிகள் மற்றும் எந்திரங்களை நல்ல பழுதற்ற நிலையில் பராமரித்துத் தரவும், பாதுகாப்பான பணி முறைகளில் பயிலவும், மேம்படுத்தவும் பயிற்சியளிக்கவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. கூடுதலாக, *Elevate Textiles* நிறுவனச் சொத்தில் துப்பாக்கிகள் அல்லது ஆயுதங்களை வைத்திருப்பதையும் *Elevate Textiles* நிறுவனம் தடை செய்கிறது.

இத்தகைய சட்டங்களை மீறி நடக்கிற *Elevate Textiles* ஊழியர்கள், தங்களுக்கு மட்டுமே தீங்கிழைத்துக் கொள்ளாமல், மற்றவர்களுக்கும் தீங்கிழைக்கிறார்கள். பாதுகாப்பு நடைமுறைகளின் சந்தேகத்திற்கிடமான விதிமீறல்கள் எதையும் அல்லது பாதுகாப்புக் கவலைகள் எதையும், அவற்றை உரிய விதத்தில் தீர்க்கும் வகையில், உடனடியாக உங்களது மேற்பார்வையாளரிடம் அறிவித்துவிட வேண்டும்.

சுற்றுச்சூழல் கொள்கைகள்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் விதமாக நமது செயல்பாடுகளை நடத்துவதே *Elevate Textiles* நிறுவனக் கொள்கையாக உள்ளது. குறைந்தபட்சம், இதற்கு *Elevate Textiles* நிறுவனம் நாங்கள் இயங்குகிற ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பொருந்துகிற அனைத்துச் சட்டங்களுக்கும், ஒழுங்குமுறைகளுக்கும் இணங்கி நடக்கும் என்றே அர்த்தமாகிறது. உங்கள் பகுதியில் சுற்றுச்சூழல் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அமலில் இல்லை என்றால் அல்லது குறைந்தளவே கண்டிப்பானவையாக இருந்தால், *Elevate Textiles* நிறுவன சர்வதேச் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் தரநிலைகளே பின்பற்றப்படும்.

பெரும்பாலும் நிறுவனங்கள், தங்களது சப்ளையர்கள் சந்திக்க வேண்டியது அவசியமாகிற உலகளாவிய சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தரநிலைகளைத் தோற்றுவிக்கின்றன. எங்களது சுற்றுசூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், அது *Elevate Textiles* நிறுவன வாடிக்கையாளர்கள் அமல்படுத்துகிற தரநிலைகளைச் சந்திக்கிற அல்லது அவற்றை விஞ்சுகிற வகையிலேயே வடிவமைக்கப்படுகின்றன.

பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் என்பது ஒவ்வொரு குடிமகனின் மற்றும் ஒவ்வொரு பொறுப்புள்ள நிறுவனத்தின் கடமை என்றே *Elevate Textiles* நிறுவனம் நம்புகிறது. மேலும் அதன் பொருள் இந்த சந்ததிக்காகவும், எதிர்வரும் சந்ததிக்காகவும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் *Elevate Textiles* நிறுவனம் ஓர் தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டும் என்பதேயாகும். சுற்றுச்சூழலுக்கான *Elevate Textiles* நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, உற்பத்தி நடைமுறையின் உபபொருட்கள், காற்று, நிலம் அல்லது தண்ணீரை எதிர்மறையாகப் பாதிக்கவில்லை என்பதைப் பார்த்துக் கொள்வதற்காக சாதனம் மற்றும் திட்டங்களுக்குச் செலவிடுகிற செலவுகளினாலேயே வெளிப்படுத்தப்படுகின்றன.

*Elevate Textiles* நிறுவனம், மறுசுழற்சி செய்யக்கூடிய பேக்கேஜிங்கை உடைய தயாரிப்புகளை வாங்குவதற்கும் அவற்றை ஏற்றுக் கொள்வதற்கும் நமது வாடிக்கையாளர்களை ஊக்குவிப்பதற்கு அவர்களோடு உழைக்கவும், மறுசுழற்சி செய்யக்கூடிய தயாரிப்புகள் மற்றும் தயாரிப்பு பேக்கேஜிங்கை வடிவமைக்கவும் சப்ளையர்களோடு உழைக்கவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

நமது இயற்கை வளங்களைப் பேணிக்காக்கவும், தங்களது அன்றாட வாழ்வில் சுற்றுச்சூழலைச் சிறப்பாகப் பேணிக் காக்கவும், நமது சமுதாயங்கள், குடும்பங்கள் மற்றும் கூட்டாளிகளை ஊக்குவிப்பதில் *Elevate Textiles* நிறுவனம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

உலகளாவிய பேண்தகைமைக்கு *Elevate Textiles* நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு

சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கான (*Environmental, Health and Safety, EHS*) *Elevate Textiles* நிறுவனத்தின் நீண்ட காலத்திய அர்ப்பணிப்பும், சமுதாயப் பொறுப்புணர்வும்தான், உலகெங்கிலும் உள்ள இந்நிறுவனம் அனைத்திலும் முதல் முன்னுரிமையாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. நமது இயக்கங்களிலும், வழங்கல் சங்கிலியிலும் சுற்றுச்சூழல் சார்ந்த பேணியலுகையை விரிவாக்குவது, “செய்ய வேண்டிய சரியான காரியம்”

என்பதாகவே பரவலாகவே அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது மேலும் இது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்குதாரர்களின் எதிர்பார்ப்புகளைச் சந்திப்பதில் அத்தியாவசியமானதாக இருக்கின்றது.

பேணியலுகை என்பது, "எதிர்கால சந்ததியினர் தங்களது சொந்தத் தேவைகளைச் சந்திப்பதற்கான திறனை சமரசம் செய்யாமலேயே தற்காலத்தவர்களின் தேவைகளைச் சந்தித்தல்" என்பதாகவே வரையறுக்கப்படுகின்றது. பேணியலுகை என்பது, மக்கள் தொகைப் பெருக்கம் தொடரத்தான் செய்யும் என்பதை புரிந்துணர்ந்து கொண்டு, பொருளாதார, சமுதாயப் பொறுப்புணர்வு மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை சமநிலைப்படுத்தவே நாடுகிறது.

*Elevate Textiles நிறுவனத்தின் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பட்டியல் (Restricted Substances List, RSL) கொள்கை*

தனது வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பான மற்றும் தரமான தயாரிப்புகளை வழங்குவது என்ற Elevate Textiles நிறுவனத்தின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பானது, தனது தயாரிப்புகளை உற்பத்திசெய்வதற்கு உலகளாவிய அளவில் பயன்படுத்தப்படுகின்ற அனைத்து இழைகள், வேதிபொருள் மற்றும் மசகு எண்ணைகள் ஆகியவற்றில் கடுமையான வழிகாட்டுதல்களை உருவாக்குவதை அவசியமாகியிருக்கின்றது. கட்டுப்படுத்திய பொருட்கள்" என்பவை, வைத்திருப்பதற்குப் பல்வேறு நாடுகளில் உள்ள சட்டங்களினாலோ அல்லது பிராண்டுகளினாலோ தடை செய்யப்பட்டிருக்கின்ற அல்லது மற்றபடி கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற வேதிப்பொருட்கள் அல்லது மற்ற பொருட்களாகும்.

RSL கொள்கையைப் பின்பற்றுவது, வாடிக்கையாளர் ஆபத்துக்களைக் குறைத்து, ஜவுளித் துறையில் ஓர் உலகளாவிய முன்னணித் தயாரிப்பாக Elevate Textiles நிறுவனத் தயாரிப்புகளை மேம்படச்செய்யும். Elevate Textiles நிறுவன RSL -ஐ www.elevatetextiles.com என்ற இணைய முகவரியில் காணலாம்.

*உங்கள் பொறுப்புகள்*

- Elevate Textiles சுற்றுச்சூழல் கொள்கைகளை அறிந்திடுங்கள்.
- Elevate Textiles நிறுவனம் அதன் சுற்றுச்சூழல் கோட்பாடுகளை எந்தெந்தப் பகுதிகளில் இன்னும் சிறப்பாக்கலாம் என்பதைக் கண்டறிந்திடுங்கள்.
- எந்தவொரு தவறான சுற்றுச்சூழல் புகாரையும் அல்லது எந்தவொரு சுற்றுச்சூழல் சிக்கல்களையும் Elevate Textiles நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வாருங்கள்.

# *Elevate Textiles* தகவல் மற்றும் சொத்தின் நேர்மை

*நிறுவன வளங்கள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான விதிகள்*

## இரகசியத் தகவல்

தனது அன்றாட வணிகத்தில் பயன்படுத்தப்படும் மதிப்புமிக்க இரகசியத் தகவல்களில், Elevate Textiles குறிப்பிடத்தக்க முதலீட்டைச் செய்துள்ளது. இரகசியத் தகவல்களின் அங்கீகரிக்கப்படாத வெளிப்பாட்டைத் தடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட நடைமுறைகள் மூலம் அந்த முதலீட்டை நாங்கள் பாதுகாப்போம். Elevate Textiles நிறுவனத்தின் செயல்பாடுகள், நடவடிக்கைகள் மற்றும் வணிக விவகாரங்கள், நமது வாடிக்கையாளர்கள் மற்றும் நமது சப்ளையர்கள் ஆகியவை கூடிய மட்டும் மிகப்பெரிய அளவிற்கு இரசியமாகவே வைக்கப்படுகின்றன என்பதைப் பார்த்துக் கொள்வதே Elevate Textiles நிறுவனத்தின் கொள்கையாகும். Elevate Textiles நிறுவன ஊழியர்கள் தங்களது வேலைவாய்ப்பின் போது, Elevate Textiles நிறுவனத்தை, அதன் வாடிக்கையாளர்களை, அதன் சப்ளையர்களைக் குறித்த இரகசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்வார்கள். அதுபோன்ற தகவல்களை அவர்கள் கடும் இரகசியத்தன்மையில் கையாள வேண்டும். மேலும் அதனை வெளியாட்களோடு விவாதிக்கக் கூடாது. அது போன்றத் தகவல்களின் உள்ளான பாதுகாப்பிற்கும் கூட்டாளிகளே பொறுப்பானவர்கள். இரகசியத் தகவல்கள் என்பவை பின்வருபவை உள்ளிட்ட, ஆனால் இவை மட்டும்தான் என்றில்லாத, Elevate Textiles நிறுவனத்திற்குச் சொந்தமானதும், பொதுமக்களுக்குத் தெரியாததுமான தகவலேயாகும்:

- Elevate Textiles வணிகத் திட்டங்கள்
- விலை நிர்ணயிக்கும் தகவல்கள்
- முன்னறிவிப்புகள்
- சந்தைப் பகுப்பாய்வுகள்
- பயிற்சியளிக்கும் விஷயங்கள்
- தொழில்நுட்பக் கையேடுகள்
- விற்பனைத் தரவு
- வாடிக்கையாளர் தகவல்கள்

- ஊழியர் / சம்பளத் தகவல்
- உற்பத்தித் தகவல்
- கொள்முதல் தகவல்
- சேவை மற்றும் தரச் செயல்திறன்
- உற்பத்தி செய்யும் குறிப்புகள் மற்றும் நடைமுறைகள்
- உற்பத்தி செய்யும் செலவு மற்றும் உற்பத்தித்திறன் தகவல்
- பரிசோதனை முறைகள்
- விற்பனையாளர் சான்றளிப்புத் தரவு
- தனிப்பட்ட ஆரோக்கியத் தகவல்கள்

அதுபோன்ற தகவல்களில், இரகசியமாக வைத்துக் கொள்வார்கள் என்ற வெளிப்படையாகச் சொன்னதோடு *Elevate Textiles* நிறுவன ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற தகவல்கள் எதுவும் அடங்குகின்றன. பொதுவாக, இரகசியத் தகவல்களை, தகவல்களை வைத்துக் கொள்வதற்கு அனுமதி பெற்ற மற்றவர்களைத் தவிர்த்து, வெளிப்படையான அனுமதியின்று யாருக்கும் வெளிப்படுத்தக் கூடாது.

*Elevate Textiles* நிறுவனத்திற்குச் சொந்தமான இரகசியத் தகவல்களுடன் கூடுதலாக, *Elevate Textiles* நிறுவனத்தின் வணிக உறவுகளோடு சேர்த்து அந்நிறுவனத்திற்கு வழங்கப்படுகிற வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் *Elevate Textiles* நிறுவன வணிகக் கூட்டாளிகள் குறித்த பொதுமக்களுக்கல்லாத இரகசியத் தகவல்களை *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள் பேணிக்காக்க வேண்டியுள்ளது. அது போன்ற தகவல்களில், வாடிக்கையாளரின் உற்பத்தி மற்றும் தயாரிப்புத் தரவு அல்லது சப்ளையர்களின் விலை நிர்ணயத் தகவல்கள் அடங்கலாம். பொதுவாகவே, அதுபோன்ற தகவல்களின் இரகசியத்தன்மையை *Elevate Textiles* நிறுவனம் பேணிக்காக்கும் என்பதாகவும், *Elevate Textiles* நிறுவனத்தின் *CEO*, *Elevate Textiles* நிறுவனத்தின் பெருநிறுவன முதுநிலைத் துணைத் தலைவர்களின் அல்லது *Elevate Textiles* நிறுவனத்தின் *CEO*-வுக்கான மற்ற நேரடி அறிவிப்பாளர்களின் வெளிப்படையான எழுத்துப்பூர்வ அனுமதியில்லாமல் கூட்டாளிகள் அதனை வெளித் தரப்பினர்களுக்கு வெளிப்படுத்த மாட்டார்கள் என்பதாகவும், இத்தரப்பினர்களுக்கு உத்திரவாதமளிக்கின்றனர்.

இந்தக் கொள்கையை மீறுவதாகக் கண்டுபிடிக்கப்படுகிற கூட்டாளிகள் எவரும், பணிநீக்கம் வரையானதும், அது உள்ளிட்டதுமான ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர். மேலும் அவர்கள் மற்றவைகளின் மத்தியில், பொருந்துகிற பங்குப் பத்திரச் சட்டங்களை மீறியதற்காகக் குடிமையியல் மற்றும் குற்றவியல் அபராதங்களுக்கும் உட்படுத்தப்படலாம்.

## நிதி அறிக்கை மற்றும் பதிவு பராமரித்தலின் துல்லியத்தன்மை

பொதுமக்களுக்குத் தாங்கள் வெளியிடுகிற அல்லது ஒழுங்குமுறை முகமைகளில் சமர்ப்பிக்கிற அறிக்கைகளிலும், ஆவணங்களிலும் முழுமையான, நியாயமான, துல்லியமான, உரிய நேரத்திலான மற்றும் புரிந்து கொள்ளக்கூடிய வெளிப்பாட்டைச் செய்வது *Elevate Textiles* நிறுவனக் கொள்கையாக உள்ளது. பரிவர்த்தனைகள் அனைத்தும் புத்தகங்களிலும், பதிவுகளிலும் துல்லியமாகப் பிரதிபலிக்கப்பட்டு வருகின்றன மற்றும் தொடர்ந்து அவ்விதமாகவே இருந்து வரும் என்பது *Elevate Textiles* நிறுவனத்தின் கொள்கையாக உள்ளது. மேற்கொண்டு, அனைத்துப் புத்தகங்களும், பதிவேடுகளும், வங்கிக் கணக்குகளும் அல்லது மற்ற *Elevate Textiles* நிறுவனச் சொத்துக்களின் மற்ற பதிவகங்களும், அனைத்து சாதாரண கணக்கியல் மற்றும் தணிக்கைக் கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படும் மற்றும் தனது புத்தகங்கள் மற்றும் பதிவுகள் அல்லது இரகசிய வங்கிக் கணக்குகள் அல்லது பதிவகங்கள் எதையும் பராமரிப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்படுகின்றது என்பதும் *Elevate Textiles* நிறுவனக் கொள்கையாக உள்ளது. பொறுப்புள்ள வணிக முடிவுகளை எடுப்பதற்காக, தகவல்களை நேர்மையாகவும் துல்லியமாகவும் பதிவு செய்வதும் அறிவிப்பதும் *Elevate Textiles* நிறுவனத்திற்கு அவசியமாகின்றது. *Elevate Textiles* நிறுவனத்தின் பதிவு தக்கவைக்கும் கொள்கைகளுக்கு ஏற்ற விதத்தில் மட்டுமே பதிவுகளைத் தக்கவைக்கவோ அல்லது அழிக்கவோ செய்ய வேண்டும்.

## நிறுவன வளங்கள் மற்றும் அறிவுசார் சொத்து

*Elevate Textiles* நிறுவனத்தின் அறிவுசார் சொத்து என்பது மதிப்புமிக்க சொத்தாகும். நிறுவனப் பெயரும், சின்னமும் *Elevate Textiles* நிறுவனத்தையே குறிக்கின்றன. மேலும் அதனை முறையற்ற விதத்தில் உபயோகிப்பது நிறுவனத்திற்குக் கெட்ட பெயர் கிடைப்பதில் அல்லது பொருளாதாரப் பின்விளைவுகள் ஏற்படுவதில் போய் முடிந்து விடலாம். கூடுதலாக, நிறுவனப் பெயரைத் தாங்கி வருகிற தயாரிப்பு எதற்கும் போதுமான தரநிலைகள் சந்திக்கப்படுகின்றன என்பதை நிறுவனம் உறுதி செய்தாக வேண்டும். மத்தியச் சட்டத்தின் கீழும், சில அயல்நாட்டுச் சட்டங்களின் கீழும், காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளைத் தயாரிக்கவும், உபயோகிக்கவும், விற்பனை செய்யவும், நகலுரிமை பெற்ற பொருட்களின் நகல்களை விநியோகிக்கவும் *Elevate Textiles* நிறுவனத்திற்குத் தனிப்பட்ட உரிமை உள்ளது. இத்தகைய உரிமைகளை அமல்படுத்துவது என்பது, *Elevate Textiles* நிறுவனம் அனுபவிக்கிற போட்டி அனுகூலத்தைப் பராமரிப்பதில் உள்ள ஒரு முக்கியமான படியாகும். கூடுதலாக, *Elevate Textiles* நிறுவனமும் *Elevate Textiles* நிறுவன ஊழியர்களும் தங்களது வேலையில் உருவாக்கிய அல்லது நிறுவன வளங்களை உபயோகித்து உண்டாக்கிய அனைத்துக் புதுக்கண்டுபிடிப்புகள், கண்டுபிடிப்புகள், யோசனைகள் மற்றும் வர்த்தக இரகசியங்களையும் சொந்தம் கொள்கிறது.

நிறுவன வணிகத்தை நடத்துவதற்கு, பின்வருபவை உள்ளிட்ட பல்வேறு விதமான மின்னணு அமைப்புகளை *Elevate Textiles* நிறுவனம் இயக்குகிறது: தொலைபேசி, செல்லுலர் ஃபோன்கள், பேஜெர்கள், குரல் அஞ்சல் வசதிகள், *Elevate Textiles* நிறுவனம் சப்ளை செய்த தனிநபர் கணினிகள், *PDA*-கள் (பெர்சனல் டிஜிட்டல் அசிஸ்டெண்டு), லேப்டாப்கள், தொலைநகல் இயந்திரங்கள், மோடம்கள், சேவையகங்கள் மற்றும் *Elevate Textiles* நிறுவனம் சப்ளை செய்த மின்னஞ்சல் மற்றும் இணைய அணுகல். இந்தக் கருவிகளின் பயன்பாடு உலகளாவிய நடத்தை விதிக்கும், இந்த உலகளாவிய நடத்தை விதி அத்தகைய கொள்கைகளில் உள்ள எந்தவொரு முரண்படுகின்ற விதிமுறைகளையும் மாற்றீடு செய்தாலொழிய அதனுடன் தொடர்புடைய எந்தவொரு *Elevate Textiles* கொள்கைகளுக்கும் இணங்க வேண்டும். மேலும், எந்த நேரத்திலும் *Elevate Textiles* நிறுவன ஊழியர்கள் இத்தகைய கருவிகளை அவதூறுண்டாக்கும் கோபமூட்டும், கேடு விளைவுக்கும் அல்லது முறையற்ற விதத்தில் உபயோகிக்கக் கூடாது அல்லது *Elevate Textiles* நிறுவனக் கொள்கை அல்லது பொருந்துகிற சட்டம் எதையும் மீறும் விதத்தில் உபயோகிக்கக்கூடாது.

## அரசாங்கத்துடனான தகவல்தொடர்புகள்

அரசாங்க முகமைகளின் செயல்பாடுகளின் முறையான செயல்திறனில் அதன் முகமைகளின் செயல்பாடுகளுடன் ஒத்துழைப்பது *Elevate Textiles* நிறுவனக் கொள்கையாக உள்ளது. ஆனால் அரசாங்க விசாரணைகளுக்குப் பதிலளிப்பது *Elevate Textiles* நிறுவனத்திற்குள் ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமானதாகும். மத்திய, மாநில, உங்கள் பகுதி அல்லது நகராட்சி அரசாங்க அதிகாரிகளிடமிருந்து வருகிற வேண்டுகோள்களை (வழக்கமான வேண்டுகோள்களைத் தவிர்த்து மற்றவை), அவற்றைப் பெறுகிற நபர் குறித்து வைத்துக் கொண்டு, உரிய கருத்துக்களுடன் சேர்த்து அவற்றை உடனடியாக *Elevate Textiles* நிறுவனக் பெருநிறுவனச் சட்டத்துறைக்குத் தெரிவிக்க வேண்டும். *Elevate Textiles* பெருநிறுவனச் சட்டத்துறை தன், வழக்கமானது அல்லாத அனைத்து வேண்டுகோள்களையும் பெறுவதற்கு ஒப்பமளிப்பதற்கும், உரிய நேரத்தில் இணங்கி நடப்பதற்காக உரிய நடவடிக்கையைத் துவக்குவதற்கும் பொறுப்பானதாகும்.

### பொதுமக்களுடனான தகவல்தொடர்புகள்

*Elevate Textiles* நிறுவன *CEO* நியமித்த நபர்கள் மட்டுமே, *Elevate Textiles* நிறுவனத்தின் சார்பாக செய்தி ஊடகத்திடம், பகுப்பாய்வு நிபுணர்களிடம் அல்லது பொது மக்களிடம் பேசுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுமக்களோடு *Elevate Textiles* நிறுவனத்திற்கு உள்ள உறவில் இந்நிறுவனம் நேர்மையைத் தக்கவைத்துக் கொள்கிறது என்பதைப் பார்த்துக் கொள்வதற்காக, செய்தி ஊடகத்திற்கும், பொதுமக்களுக்கும் தெளிவான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்கு *Elevate Textiles* நிறுவனம் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொள்கின்றது. செய்தி ஊடகம், பகுப்பாய்வு நிபுணர்கள் அல்லது மற்ற நபர்கள் கேள்விகளைக் கேட்டுத் தொடர்பு கொண்டால், அவர்களுக்குப் பதிலளிக்கப்படுவதற்கு அவர்களை தலைமை மனிதவளத் துறை அதிகாரியிடம் அனுப்பிவைக்க வேண்டும்.

# நீண்டநாள் நிலைக்கும் அர்ப்பணிப்பு

*தரம், சேவை, மதிப்பு & நேர்மை. இதில் ஒரு வித்தியாசம் இருக்கின்றது.*

*Elevate Textiles* நிறுவனத்தில் உள்ள ஒவ்வொருவருமே, ஒரு நன்னெறி சார்ந்த விதத்தில் செயல்படவும், தங்களது கடமைகளை நிறைவேற்றவும், அவர்களது செயல்பாடுகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளவும் பொறுப்பானவர்களாவர். எமது மதிப்புகளும் கொள்கைகளும், அவற்றின் எதிர்நோக்கில் உலகளாவியவையாகும் மேலும் இத்தகைய மதிப்புகளையும் கொள்கைகளையும் நாம் அனைவரும் முழுமையாகப் புரிந்து கொள்ளவும் அவற்றைப் பயன்படுத்தவும் நேரமெடுத்துக் கொள்வது அவசியமானதாகும். நாம் ஒவ்வொருவருக்கும் இது தருகிற சவாலை *Elevate Textiles* நிறுவன நிர்வாகம் புரிந்துகொள்கிறது. ஆனால் நமது நிறுவனத்தின் வெற்றியே, சந்தையிலும், ஒவ்வொருவரோடும் நமக்குள்ள உறவுகளிலும், சமுதாயத்தில் நமக்குள்ள உறவுகளிலும் உள்ள நமது நேர்மையையே சார்ந்துள்ளது.

தனது மற்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் கூடுதலாக, இந்த உலகளாவிய நடத்தை விதிக்கு இணங்கி நடப்பதை *Elevate Textiles* நிறுவனம் அயராது தொடர்ந்து கண்காணிக்கும். இதில், *Elevate Textiles* நிறுவனத்தின் அதிகாரிகளின் தீர்மானத்தின் பேரில், உலகெங்கிலும் உள்ள *Elevate Textiles* நிறுவன ஊழியர்களுக்கான இணக்கப் பயிற்சியும் அடங்குகிறது. மேற்கொண்டும், ஒழுங்குமுறை அல்லது அமெரிக்க பங்குப்பத்திரச் சட்ட இணக்க மறைமுகத் தாக்கங்கள் உள்ள தனது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அமல்படுத்துவது மற்றும் அவற்றுக்கு இணங்கி நடப்பதில் *Elevate Textiles* நிறுவனம் தணிக்கைகளையும் நடத்தலாம்.

# கூட்டாளி உறுதிப்படுத்தல்

இந்தப் பகுதியை தயவுசெய்து உங்கள் பகுதி மனிதவள மேலாளர் அல்லது உங்கள் பகுதி பொது மேலாளரிடம் திருப்பி அனுப்புங்கள் (உங்களது கூட்டாளியின் வேலைவாய்ப்புக் கோப்பில் வைப்பதற்கு).

இந்த *Elevate Textiles* நிறுவனத்தின் உலகளாவிய நடத்தை விதியின் நகல் ஒன்றை நான் பெற்றுக்கொண்டேன். இதில் விவரித்துள்ள எனது வேலைக்குப் பொருந்துகிற நடத்தைத் தரநிலைகளை நான் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கி நடக்கச் சம்மதிக்கிறேன்.

கையொப்பம் ____________________

அச்சிட்ட பெயர் ____________________

தேதி ____________________

துறை ____________________

இடம் ____________________

உலகளாவிய நடத்தை விதி குறித்த எந்தவொரு கேள்விகளும் கவலைகளும் *Elevate Textiles* பெருநிறுவனச் சட்டத்துறையிடம் (*compliance@elevatetextiles.com*) அல்லது பொது ஆலோசகர் மற்றும் தலைமை இணக்க அதிகாரியிடம் (*Kristen.hughes@elevatetextiles.com; +1-704-951-2655*) தெரிவிக்கப்பட வேண்டும்.

இந்தப் பக்கம் வேண்டுமென்றே காலியாக
விடப்பட்டுள்ளது.

ET0919